இதில் தனியார் நிலமும் இருக்கிறது. அதேபோல் Central Government நிலமும் இருக்கிறது. அதற்கு நம்முடைய State Government share–ஐக் கொடுக்க வேண்டும். அவர்கள் கொடுக்கத் தயாராக இருந்தால்— இப்போதுகூட share கொடுக்கவில்லை என்று அந்த வேலையை நாங்கள் நிறுத்தி வைக்கவில்லை. இரயில்வே துறையில் அந்தப் பணியைத் துவக்க அவர்களும் ஆயத்தமாக இருக்கிறார்கள். கூடிய விரையில் அந்தப் பிரச்சினை முடிந்து, பாலம் கட்டப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விளக்கத்தை நான் முழுமையாக திரும்பப் படிக்க வேண்டும் என்றால், படிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்களுக்கே நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அதே பதில்தான். Estimate cost 68 கோடியே 65 இலட்சம் ரூபாய். நம்முடைய மாநகராட்சியினுடைய cost 10 கோடியே 65 இலட்சம் ரூபாயாகும். மாநகராட்சி தயாராக இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில், மாநகராட்சி தயாராக இருக்கின்றது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்கு உட்பட்ட உண்ணாமலைக்கடை பேரூராட்சியில் விபத்து நிறைந்த விரிகோடு பகுதியில் 2014 ஆம் ஆண்டே, இரயில்வே மேம்பாலம் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இந்தக் கேள்வி வில்லிவாக்கம் தொகுதி சம்பந்தப்பட்டதாகும். நீங்கள், உங்கள் தொகுதியைப் பற்றிக் கேட்டீர்கள் என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்காது. இதற்கு தனிக் கேள்வி போடவும்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

4—

அங்கன்வாடி மையம்

***7378—திரு. டி.எ. ஏழுமலை:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி, திருவள்ளூர் ஒன்றியம், கரிக்களவாக்கத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி விஜயதரணி, அமைச்சரிடம் பதில் இருக்காது. (குறுக்கீடு) அதுமாதிரியெல்லாம்* allow *செய்ய இயலாது. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தனிக் கேள்வி போடுங்கள்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக பதில் அளிப்பார்கள். (குறுக்கீடு) நீங்கள் தனிக் கேள்வி போடுங்கள்; நல்ல பதிலை நீங்கள் பெறலாம். (குறுக்கீடு) நீங்கள் தனிக் கேள்வி போடுங்கள்; நான் அதனை சீக்கிரம்* allow *செய்கிறேன். (குறுக்கீடு) கேள்வியைச் சீக்கிரம் எழுதிக் கொடுங்கள், அதனை நான்* allow *செய்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிற்கு வராது. துணைக் கேள்வி என்பது அந்த மூலக் கேள்வியை ஒட்டி கேட்க வேண்டும். நீங்கள் சென்னை சம்பந்தப்பட்ட மூலக் கேள்வியில் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பற்றி துணைக் கேள்வி கேட்டீர்களென்றால், அமைச்சரால் எப்படிப் பதில் சொல்ல முடியும். சரியான பதிலைச் சொல்ல முடியாது. உட்காருங்கள்.*

2017 ஜூன் 14]
மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மறைந்த முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதி கரிக்களவாக்கத்தில் ஏற்கெனவே அங்கன்வாடி மையம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திருமதி எஸ். விஜயதரணி, உட்காருங்கள். நீங்கள் பேசும்போது பேசுங்கள். நீங்கள் இன்றைக்கு மானியக் கோரிக்கையில் பேசுகிறீர்கள். அப்போது உங்களுடைய தொகுதிக் கோரிக்கையைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) இப்போது உட்காருங்கள். நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன். உட்காருங்கள். அவையில் இப்படியெல்லாம் தொல்லை செய்யாதீர்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவருடைய உத்தரவிற்கு நீங்கள் கட்டுப்படுங்கள். கேள்வி நேரத்தில் இப்படியெல்லாம் உங்கள் இஷ்டத்திற்குக் கேள்வி கேட்க முடியாது. உட்காருங்கள். மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிற்கு வராது. மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மானியக் கோரிக்கையில் உங்கள் தொகுதிப் பிரச்சினைகள் குறித்துப் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதி, திருவள்ளூர் வட்டாரத்தில், கரிக்களவாக்கத்தில் ஏற்கெனவே அங்கன்வாடி மையம் (குறுக்கீடு) 2014 ஆம் ஆண்டு முதல் அரசு

இலவச கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, 2016—2017 ஆம் ஆண்டிற்கான 'தாய்' திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்சமயம் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டி முடிக்கும் தருவாயில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.

திரு. டி.எ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்காகவே தன் வாழ்வையே அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த மனித தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டில் இன்றைக்கு என் போன்ற சாதாரண அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கு எல்லாம் நல்வழி காட்டி நல்லரசு நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். பூந்தமல்லி தொகுதியில், கரிக்களவாக்கம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் ஒன்று கட்ட வேண்டுமென்று கேட்டு கோரிக்கை வைத்திருந்தேன். தற்போது அங்கன்வாடி மையம் கட்டும் பணி அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மனோகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

5—

நூற்பாலை

***4816—திரு. அ. மனோகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, கரிவலம்வந்தநல்லூரில் நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?